# இந்திய அரசியல் வரைபடத்தை வடிவமைப்பதில் குறிப்பிடத்தக்கவர்!

## ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங் புகழாரம்... முதல் பக்கத் தொடர்ச்சி

பணியானது, தமிழ்நாட்டின் குரலைத் தேசிய அளவில் ஒலிக்கச்செய்தது, அதே நேரத்தில் இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்தை வலுப்படுத்துவதற்கும் பங்களித்தது.

மதியூகமிக்க அவரது செயல்பாடானது, பொது நலனுக்காக அனைவரும் ஒன்றுசேர்ந்து பாடுபடும் அதேவேளையில் நமது வேறுபாடுகளை மதித்துக் கொண்டாடுவதே இந்தியத் தன்மை என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

நண்பர்களே, கலைஞர் கருணாநிதி இந்திய அரசியலில் ஒரு பேராளுமை ஆவார். நாடு விடுதலையடைந்த பிறகு பேரளவில் மாற்றங்களைச் சந்தித்துக்கொண்டிருந்த 1960 களில் அவர் ஒரு தலைவராக உருவெடுத்தார். பல மாநிலக் கட்சிகள் உருவான, ஆட்சி அமைத்த காலம் அது. பஞ்சாப் முதல் தமிழ்நாடு வரை இந்தப் போக்கு தெள்ளியநீராய்த் தெரிந்தது. பல வட இந்திய மாநிலங்களில் சம்யுக்த விதாயக் தள அரசாங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. அந்தக் காலகட்டத்தில் உருவான பல மாநிலக் கட்சிகள் முகமிழந்து போய்விட்ட நிலையில், 1960 முதல் இன்று வரை அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு கட்சியாக தி.மு.க.வை கலைஞர் கருணாநிதி அவர்கள் வளர்த்தெடுத்துள்ளார். இன்றும் அக்கட்சியின் ஆட்சி தொடர்கிறது.

### மாநில முதல்வர்கள் தேசியக் கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத் தந்தவர்!

நண்பர்களே, இந்தியா தனது 78ஆவது விடுதலை நாளை இந்த வாரம் கொண்டாடியது. 1973க்கு முன்புவரை ஒவ்வொரு மாநிலத்திலும் விடுதலை நாளிலும் ஆளுநரே தேசியக் கொடியை ஏற்றிவைத்தார் என்பது உங்களில் பலருக்குத் தெரிந்திருக்காது.

மாநிலத்தில் விடுதலை நாளில் முதலமைச்சரே கொடியேற்றிவைக்க வேண்டும் என்பதற்காக முழங்கிய கலைஞர் கருணாநிதி அவர்கள், சிறப்புமிகு தேசிய சிறப்புகளில் மூவர்ணக் கொடியை ஏற்றிவைக்கும் உரிமை முதலமைச்சர்களுக்கு வேண்டும் என்று கோரினார். அவரது குரலுக்குச் செவிசாய்க்கப்பட்டது; நாட்டின் விடுதலை நாளில் மாநிலத்தில் முதலமைச்சர் கொடி ஏற்றிவைக்க அனுமதிக்கப்பட்டது. அந்தவகையில், 1974 ஆகஸ்ட் 15 அன்று தேசியக்கொடியை ஏற்றிவைத்த, தமிழ்நாட்டின் முதல் முதலமைச்சராகவும் கலைஞர் கருணாநிதி அவர்கள் விளங்கிடுகிறார்கள்.

நண்பர்களே, ஜனநாயகச் செயல்பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்த தலைவர்அவர். தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் அரசியல் வரைபடத்தை வடிவமைப்பதில் அவர் குறிப்பிடத்தக்க அளவில் பங்களித்தார். ஒன்றிய அரசாங்கங்களில் அவரது பங்கும், ஜனநாயகக் கொள்கைகளுக்கான அவரது ஆதரவுக்குரலும் இந்திய ஜனநாயகத்தில் தனி முத்திரையைப் பதித்துள்ளன.

### ஒன்றியத்தில் நிலையான அரசுகளை ஏற்படுத்தியதில் கலைஞரின் பங்கு!

நண்பர்களே, பல்வேறு அரசியல் கொள்கைகளைக் கொண்ட அரசியல் அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றியுள்ளதில் வெளிப்பட்ட அவரது திறமை இந்திய ஜனநாயகத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பின் குறிப்பிடத்தக்கூறு ஆகும். பல்வேறு அரசியல் கட்சிகளையும் ஒருங்கிணைத்து நிலையான அரசாங்கங்களை ஏற்படுத்தியதில், இந்திய ஜனநாயகத்தின் பன்முகத்தன்மை பிரதிபலிக்குமாறு திறமையாகச் செயல்பட்டார்.

வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மத்தியில் ஆட்சியில் இருந்தபோது, பா.ஜ.க. கூட்டணியில் தி.மு.க. இருந்தது என்பதை இங்கே நான் நினைவுகூர்கிறேன். அந்த அமைச்சரவையில் சாலைப்போக்குவரத்துக்கான கேபினட் அமைச்சராக நான் இருந்தேன் என்பதையும் சொல்லிக்கொள்வதில் மகிழ்கிறேன்.

### தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் கலைஞரின் ஆதரவு!

கருத்தியல்ரீதியான வேறுபாடுகளைக் கொண்டிருந்த போதிலும், வாஜ்பாய் அரசை ஆதரிப்பதில் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஆக்கபூர்வமாகவும் நேர்மறையாகவும் செயல்பட்டார் என்பதை பெருமிதத்துடன் நினைவுகூர்கிறேன். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளின் போதும் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளின் போது அவர் வழங்கிய ஆதரவு உறவுக்குக் கைகொடுக்கும் அவரது பண்பை வெளிப்படுத்தும் வகையிலானது.

### முரசொலி மாறன் பங்கேற்ற ‘சியாட்டில்’ மாநாடு வெற்றிகரமாக அமைந்தது!

1999 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. அப்போது, உலக வாணிபக்கழகத்தின் மாநாடு சியாட்டிலில் நடைபெற்றது. இந்தியாவின் நலன்கள் எவ்வகையிலும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்று பிரதமர் வாஜ்பாய் விரும்பினார். இது குறித்து திரு கருணாநிதி அவர்களுடன் வாஜ்பாய் பேசினார். இந்தியாவின் நிலைப்பாடு வலுவாக பிரதிநிதித்துவப்படுத்தப்படும் என்று கலைஞர் கருணாநிதி அவர்கள் பிரதமரிடம் உறுதியளித்தார். அப்போது, திமுகவின் திரு முரசொலி மாறன் வர்த்தக அமைச்சராக இருந்தார். சியாட்டில் மாநாடு இந்தியாவுக்கு வெற்றிதந்த மாநாடாக அமைந்தது என்பதையும் இங்கே மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

### வேறுபட்ட கொள்கை கொண்டிருந்த தலைவர்களுடன் கலைஞரின் உறவு!

தனது வாழ்க்கை முழுவதும், பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தேசியத் தலைவர்களுடனும் திரு கருணாநிதி அவர்கள் வலுவான அரசியல் உறவைப் பேணி வந்தார். தமது கொள்கைகளிலிருந்து சிறிதும் வழுவாமல் அதற்கு உண்மையாக இருந்தபடியே, அரசியல் ரீதியில் வேறுபட்ட கொள்கைகொண்ட தலைவர்களுடன் பணியாற்றிய அவரது திறன் அவரது அரசியல் ஆளுமைத் தன்மைக்குச் சான்றாக உள்ளது. இந்த உறவுகளை வெறுமனே அரசியல் கூட்டணிக்காக மட்டும் அவர் அமைத்துக் கொள்ளவில்லை; நாட்டுக்கான பங்களிப்பில் ஒருவருக்கொருவர் மரியாதைதரும் வகையில் உறவுகளைப் பேணினார்.

நண்பர்களே, அனைத்தையும் உள்ளடக்கிய இந்திய அடையாளம் கலைஞர் கருணாநிதி அவர்களின் கொள்கைகளில் பிரதிபலிக்கிறது. கல்வியை எடுத்துக்கொண்டால், விளிம்புநிலை மக்களுக்குத் தரமான கல்வியை வழங்குவதற்கு அவர் அயராது உழைத்தார், அதே போல் மகளிர் குழந்தைகள் வாழ்வு மேம்படவும் அவர் பாடுபட்டார். எப்போதுமே எல்லாருக்கும் எல்லாம் என்பதே கலைஞர் கருணாநிதி அவர்களின் தொலைநோக்குப் பார்வையாக இருந்தது.

### தமிழ்நாட்டின் சமூகக் கட்டமைப்பில் அழியாத முத்திரை பதித்தவர்!

பெண்கள், விளிம்பு நிலையிலுள்ள சமூகங்களின் உரிமைகளுக்காக அவர் கடுமையாக வாதாடினார். பாலின சமத்துவத்தை மேம்படுத்தும், பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் முன்னோடி சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். இப்படியாக, தமிழ்நாட்டின் சமூகக் கட்டமைப்பில் ஒரு அழியாத முத்திரையைப் பதித்தார்.

அவரது ஆட்சிக் காலத்தில், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை இயற்றினார். மேலும், பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் நோக்கத்துடன், 1989இல் அவருடைய ஆட்சியின்போது தருமபுரியில் முதன்முதலில் மகளிர் சுயஉதவிக் குழுக்களை உருவாக்குவதில் முக்கியப் பங்குவகித்தார். அமைப்புசாராத் துறையில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள், திருநங்கைகள் போன்றவர்களுக்காக நல வாரியங்களை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றினார்.

> **கலைஞர் அவர்கள் திறமையான நிர்வாகியாக இருந்தார். ‘மனுநீதிநாள் திட்டம்’ என்ற திட்டத்தைத் தொடங்கினார். இம்முயற்சியின் கீழ், மக்களின் பிரச்சினைகளைக் கேட்க மட்டும் வாரந்தோறும் ஒரு நாள் ஒதுக்குமாறு மாவட்ட அலு வலர்களுக்கு உத்தரவிட்டிருந்தார். மக்களுடன் நேரடியான, ஆழமான தொடர்பை ஏற்படுத்துவது என்பது ஒவ்வொரு அரசியல்வாதியும் அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று.**

மிகவும் பாதிக்கப்பட்ட குடிமக்களை ஒரு நாடு எப்படி நடத்துகிறது என்பதில்தான் அந்நாட்டுக்கான முன்னேற்றத்தின் உண்மையான அளவுகோல் உள்ளது என்பதை அவருடைய பணி நினைவூட்டுகிறது.

### அரசியல்வாதிகள் கலைஞரிடம் கற்றுக் கொள்ள வேண்டிய பண்பு!

நண்பர்களே, அவர் திறமையான நிர்வாகியாக இருந்தார். ‘மனுநீதிநாள் திட்டம்’ என்ற திட்டத்தைத் தொடங்கினார். இம்முயற்சியின் கீழ், மக்களின் பிரச்சினைகளைக் கேட்க மட்டும் வாரந்தோறும் ஒரு நாள் ஒதுக்குமாறு மாவட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டிருந்தார். மக்களுடன் நேரடியான, ஆழமான தொடர்பை ஏற்படுத்துவது என்பது ஒவ்வொரு அரசியல்வாதியும் அவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய ஒன்று.

கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தின் மிக முக்கியமான அம்சங்களுள் ஒன்று, கல்வி வளர்ச்சியிலும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிலும் அவர் கவனம் செலுத்தியது. தமிழ்நாட்டின் உண்மையில், இந்தியாவின் எதிர்காலத்தைக் கட்டியமைக்கும் தூண்கள் இவை என்று அவர் நம்பினார்.

ஆனால், கலைஞர் கருணாநிதி அவர்களின் தொலைநோக்குப் பார்வை தமிழ்நாட்டுடன் மட்டும் நின்றுவிடவில்லை. எந்த ஒரு மாநிலத்தின் வளர்ச்சியும் ஒட்டுமொத்த தேசத்தின் முன்னேற்றத்திற்கும் பங்களிக்கிறது என்பதை அவர் உணர்ந்திருந்தார். உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் அவர் மேற்கொண்ட முயற்சிகள் சாலைகள், பாலங்கள் அல்லது பொது வசதிகள் போன்ற வடிவங்களில் இந்தியாவின் வளர்ச்சியை நோக்கிய பயணத்தை உயர்த்தக்கூடிய ஒரு தமிழ்நாட்டை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

இந்தத் தளத்தில் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஆற்றியிருக்கும் பணியானது தற்சார்பு மற்றும் வளர்ச்சிக்கான இந்திய ஆன்மாவுக்கான சான்றாகும்.

கல்வியும் உள்கட்டமைப்பும் ஒருவருடைய வாழ்க்கையை மாற்றியமைக்கும் என்பதில் அவர் கொண்டிருந்த நம்பிக்கையானது வலுவான, தன்னிறைவு கொண்ட, தற்சார்புள்ள இந்தியாவைக் தட்டியெழுப்புவதற்கான தேசியப் பார்வையுடன் ஒத்துப்போகிறது. பிராந்திய வளர்ச்சியானது தேசிய வளர்ச்சியின் ஒருங்கிணைந்த பகுதி என்பதையும், ஒவ்வொரு மாநிலத்தின் செழுமையும் தேசத்தின் ஒட்டுமொத்த செழிப்புக்கும் பங்களிக்கிறது என்பதையும் அவருடைய மரபு நினைவூட்டுகிறது. இது கூட்டாட்சித் தத்துவத்தைச் சிறந்த முறையில் எடுத்துக்காட்டுகிறது.

### அழியாத முத்திரை பதித்த கலைஞரின் எழுத்துக்கள்!

கலைஞரின் செல்வாக்கு அரசியலுக்கெல்லாம் அப்பாற்பட்டது. அவர் ஒரு சிறந்த எழுத்தாளர், கவிஞர், நாடக ஆசிரியர். அவருடைய படைப்புகள் தமிழ் இலக்கியத்தையும் திரைத்துறையையும் வளப்படுத்தின. தமிழ் இலக்கியம், திரைத்துறைக்கான அவருடைய பங்களிப்புகள், தமிழ்நாடு மற்றும் ஒட்டுமொத்த இந்தியாவின் பண்பாட்டுத் தளத்தில் அழியாத முத்திரையைப் பதித்துள்ளன.

தமிழ் மொழியையும் பண்பாட்டையும் மேம்படுத்துவதற்கான அவருடைய முயற்சிகளெல்லாம், ஒருவரின் பண்பாட்டு அடையாளத்தைப் பாதுகாப்பதும் கொண்டாடுவதும் பரந்துபட்ட இந்திய அடையாளத்துக்கு இன்றியமையாதது என்ற அவருடைய நம்பிக்கையில் வேரூன்றி இருந்தன. இந்தியா ஒரு தேசமாக, பல்வேறு மொழிகள், பண்பாடுகள் மற்றும் மரபுகளால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பன்முகத்தன்மையின் ஒவ்வொரு அம்சமும் இந்த மாபெரும் தேசத்தின் செழுமைக்குப் பங்களிக்கிறது என்பதை கலைஞர் கருணாநிதி அவர்கள் அங்கீகரித்தார்.

### நல்ல மாற்றங்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்தவர்!

நண்பர்களே, கலைஞர் கருணாநிதி அவர்கள் ஜனநாயகத்துக்காகப் போராடினார். மேலும், நல்ல மாற்றங்களைக் கொண்டுவருவதற்காகத் தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார். பிரதமர் மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசும் ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சியின் சக்தியை நம்புகிறது. இந்தியா தன்னுடைய 140 கோடி மக்களின் விருப்பங்களையும் நிறைவேற்றுகிறது. அதோடு மட்டுமல்லாமல், ஜனநாயகமானது மக்களுக்கு வளர்ச்சியை வழங்குகிறது, மக்களுக்கு அதிகாரமளிக்கிறது என்ற நம்பிக்கையையும் அளித்து வருகிறது.

### உத்தரப்பிரதேசம் - தமிழ்நாட்டில் பாதுகாப்பு வழித்தடங்கள்!

இத்தருணத்தில், வளர்ச்சிக்கான நம்முடைய அர்ப்பணிப்பானது கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன். உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களிலும் பாதுகாப்புத் தொழில் துறை வழித்தடங்களை நிறுவுவதற்கு இந்திய அரசு எடுத்திருக்கும் முடிவு இதற்கான எடுத்துக்காட்டாகும். இந்த வழித்தடங்கள் உள்நாட்டுப் பாதுகாப்பு உற்பத்தித் துறையை உயர்த்துவதையும், இறக்குமதியை நம்பியிருப்பதைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்த வழித்தடங்கள் முதலீட்டை ஈர்க்கவும், புதுமைகளை ஊக்குவிக்கவும், இந்தியாவில் பாதுகாப்பு உற்பத்திக்கான வலுவான சூழலை உருவாக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

பழமையான நகரமான காசி, இன்றைய வாராணசி அல்லது பனாரஸைச் சேர்ந்தவன் நான் என்பதால், காசி தமிழ்ச் சங்கமத்தின் முயற்சியையும் எடுத்துரைக்க விரும்புகிறேன். இந்தியாவின் பண்பாட்டு ஒருங்கிணைப்பை நோக்கி, தமிழ் மக்களுக்கும் காசிக்கும் இடையே பல நூற்றாண்டுகளாக நீடித்துவரும் தொடர்பை மீண்டும் கண்டறிந்து, மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு குறிப்பிடத்தக்க முயற்சியான காசி தமிழ்ச் சங்கமத்தை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். காசி தமிழ்ச் சங்கமத்தின் வெற்றியைத் தொடர்ந்து, சௌராஷ்டிராதமிழ்ச் சங்கமம் என்ற அமைப்பைத் தொடங்குவதன் மூலம் பண்பாட்டு ஒருங்கிணைப்புக்கான தன்னுடைய உறுதிப்பாட்டை விரிவுபடுத்தியுள்ளது. இந்த முயற்சி மேற்கு இந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான பண்பாட்டு ஒருங்கிணைப்பைக் கொண்டாட முயல்கிறது.

கலைஞர் கருணாநிதி அவர்களின் வாழ்க்கை குறித்தும் பாரம்பரியம் குறித்தும் நாம் நினைவுகூர்கிறோம்; இவ்வேளையில், வருங்கால சந்ததியினர் அவருடைய வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்களைக் கருத்தில்கொள்வது அவசியம். கலைஞர் கருணாநிதி அவர்களின் வாழ்க்கையிலிருந்து இளம் இந்தியர்கள் கற்றுக்கொள்ளக்கூடிய முக்கியமான பாடங்களுள் ஒன்று, சொந்த மதிப்பீடுகளுக்கு உண்மையாக இருப்பதாகும். அனைத்துக் குடிமக்களும், அவர்களின் பின்னணி என்னவாக இருந்தாலும், கௌரவமான வாழ்க்கை வாழ்வதற்குத் தகுதியானவர் என்ற நம்பிக்கையிலிருந்து அவர் ஒருபோதும் விலகவில்லை. இது இந்தியப் பண்பாட்டையும் மரபையும் சிறந்த முறையில் எடுத்துக்காட்டுவதாக நினைத்தார். அவருடைய மதிப்புகள் மீதான இந்த அசைக்க முடியாத அர்ப்பணிப்பு அவருடைய தலைமையின் தனிச்சிறப்பாகும். மேலும், இது அவருடைய காலத்தில் இருந்ததைப் போலவே இன்றும் பொருத்தமான பாடமாக உள்ளது.

கலைஞர் கருணாநிதி அவர்களின் நாணயத்தை வெளியிடுவதானது வளர்ச்சிக்காகவும் நீதிக்காகவும் சமூகத்தின் முன்னேற்றத்துக்காகவும் அர்ப்பணிக்கப்பட்ட அவருடைய வாழ்க்கைக்கான அஞ்சலியாகும். இது நம்முடைய கூட்டு நன்றியுணர்வின் அடையாளமாகவும், அவர் முன்வைத்த மதிப்பீடுகளுக்கான நினைவூட்டலாகவும் இருக்கும்.

### இந்நிகழ்ச்சிக்கு என்னை அழைத்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

இந்த வார்த்தைகளுடன், எனது உரையை முடிக்க விரும்புகிறேன். இந்நிகழ்ச்சிக்கு என்னை அழைத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய இதயபூர்வமான அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவரது வாழ்க்கையும், பொதுவாழ்வில் அவர் ஆற்றிய பங்களிப்பும் என்றென்றும் நினைவுகூரப்படும்.

இவ்வாறு ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் உரையாற்றினார்.

# ஒரு இனத்தின் அரசு! முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

இதோ நாம் இந்த விழாவை நடத்திக் கொண்டிருக்கிறோமே, இந்த கலைவாணர் அரங்கத்தில் இருந்தே தொடங்கலாம்.

- **பாலர் அரங்கமாக இருந்த இதனை, மிகப் பெரியதாகக் கட்டி எழுப்பி, ‘கலைவாணர் அரங்கம்’ என்று மாற்றினார்.**
- **தாய்மொழியாம் தமிழ்மொழிக்குச் ‘செம்மொழி’ தகுதியைப் பெற்றுத் தந்தார்.**
- **மெட்ராசை ‘சென்னை’ ஆக்கினார்.**
- **தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் - போன்ற எண்ணற்ற திட்டங்களை உருவாக்கினார்.**
- **44 அணைக்கட்டுகள்**
- **ஏராளமான கல்லூரிகள் பல்கலைக் கழகங்கள்**
- **சென்னையைச் சுற்றி மட்டும்**
- **அண்ணா சாலை, அண்ணா மேம்பாலம்**
- **வள்ளுவர் கோட்டம்**
- **கத்திபாரா பாலம்**
- **கோயம்பேடு பாலம்**
- **செம்மொழிப்பூங்கா**
- **டைடல் பார்க்**
- **தலைமைச் செயலகமாகக் கட்டப்பட்டு, இன்று பெரிய அரசு மருத்துவமனையாக இருக்கும் ஓமந்தூரார் மருத்துவமனை**
- **மெட்ரோ ரயில்**
- **அடையாறு ஐ.டி. காரிடார்**
- **நாமக்கல் கவிஞர் மாளிகை**

- என அனைத்தும் கலைஞரால் உருவாக்கப்பட்டவை! இதனை யாராலும் மறைக்க முடியாது.

### முதல்வர்களுக்கு - கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத் தந்தவர் கலைஞர்!

- கடந்த 15ஆம் நாளன்று இந்திய நாட்டின் 78ஆவது விடுதலை நாளை நாம் கொண்டாடினோம். அன்று நான் மட்டுமல்ல, நாட்டிலுள்ள அத்தனை மாநில முதலமைச்சர்களும் கொடியேற்றினார்களே, அதற்கான உரிமையைப் பெற்றுத் தந்தவரும் முதலமைச்சர் கலைஞர்தான்!
- ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் சொன்னாரே.......

“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்” – என்று,

அப்படி ஆட்சி நடத்தியவர் கலைஞர் அவர்கள்!

அதனால்தான் இன்று அகில இந்தியாவும் போற்றும் தலைவராக கலைஞர் அவர்கள் உயர்ந்து நிற்கிறார்.

“செயல்படுவதும், செயல்பட வைப்பதும்தான் அரசியல்” என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாக இருந்தவர் கலைஞர். ஒரு கட்சியின் தலைவராக; ஒரு மாநிலத்தின், நாட்டின் தலைவராக; எப்போதும் சிந்தித்தார்! செயல்பட்டார்!

- 1971ஆம் ஆண்டு இந்தியாவைப் பாகிஸ்தான் அச்சுறுத்தியபோது, தமிழ்நாடு சட்டமன்றத்தில் பாகிஸ்தான் படையெடுப்பு கண்டனத் தீர்மானம்,
- 1972ஆம் ஆண்டு பாகிஸ்தான் போரின் போது அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் நாட்டுப் பாதுகாப்புக்காக ஆறு கோடி ரூபாய் நிதி,

போரில் வீரமரணம் அடைந்த ராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு நிதி மற்றும் நிலம்,

- 1999ஆம் ஆண்டு கார்கில் போரின் போது இந்தியாவிலேயே அதிகத் தொகையை, அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் மூன்று தவணைகளாக மொத்தம் 50 கோடி ரூபாய் வழங்கியவர் தலைவர் கலைஞர்!

### மாநில உரிமைகளுக்குக் குரல்! நாட்டின் பாதுகாப்புக்கு கரம்!

மாநில உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த அதேவேளையில் நாட்டின் பாதுகாப்பு என்று வருகிறபோது கை கொடுத்தவர்தான் கலைஞர் அவர்கள்.

**நாணயம் என்பதற்கு இன்னொரு பொருளும் இருக்கிறது. கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்குப் பெயரும் நாணயம்தான்!**

**“சொன்னதைச் செய்வோம் செய்வதைத்தான் சொல்வோம்” என்று சொல்லி, சொன்னதையெல்லாம் செய்து காட்டியது, தலைவர் கலைஞர் அவர்களது நாணயத்துக்கு அடையாளம்!**

அவரது வழியில் இன்றைய திராவிட மாடல் அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி கலைஞர் அரசாகச் செயல்பட்டு வருகிறது.

“சட்டசபையை அதிகார அமைப்பாக இல்லாமல் சமூகத்திற்கு நன்மை செய்யும் அமைப்பாகக் கருதவேண்டும்” என்றார், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள். அப்படித்தான் நாங்கள் செயல்பட்டு வருகிறோம்.

இது, எனது அரசல்ல; நமது அரசு! ஒரு கட்சியின் அரசல்ல; ஒரு இனத்தின் அரசு! திராவிடக் கருத்தியல் கொண்ட அரசு!

இதனை என்னுள் ஏற்படுத்தியவர் தலைவர் கலைஞர். அந்த வகையில் கலைஞரே இயக்கிக் கொண்டிருக்கிறார்.

### நாணயத்தில் ‘தமிழ் வெல்லும்’ எனும் சொல்! இதுவும் கலைஞரின் சாதனைதான்!

“ஒரு மனிதனின் வாழ்க்கை அவனது மரணத்திற்குப் பிறகு கணக்கிடப்பட வேண்டும்” என்று சொன்னவர் தலைவர் கலைஞர் அவர்கள். இன்றைக்கு அவரது முகம் தாங்கிய நாணயத்தில் ‘**தமிழ் வெல்லும்**’ என்ற சொல்லும் இடம் பெற்றுவிட்டது என்றால், இதுவும் கலைஞரின் சாதனைதான்!

### சாதனைப் பெருவாழ்வால் - தமிழர்களின் நெஞ்சம் நிறைந்த தலைவர்!

தனது சாதனைப் பெருவாழ்வால் தமிழினத்தின் நெஞ்சத்தில் நிறைந்துவிட்ட தலைவர் கலைஞர் புகழ் வாழ்க!

தலைவர் கலைஞர் புகழ் வாழ்க!

தலைவர் கலைஞர் புகழ் வாழ்க!

On behalf of the people of Tamil Nadu, Once again, I sincerely thank Hon'ble Rajnath Singh for being here today to honour Thalaivar Kalaignar.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்கள்.

### 172–வது வார்டு உறுப்பினர் இரா.துரைராஜ் மேம்பாட்டு நிதி

# ரூ.30 லட்சத்தில் கட்டிடம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்!

## தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி.– மேயர் பிரியா – மு.மகேஷ்குமார் பங்கேற்பு

*சென்னை, ஆக. 19 -*

*சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதி 13-வது மண்டலம் 172-வது வார்டு மாமன்ற உறுப்பினர் இரா.துரைராஜ் மேம்பாட்டு நிதி ரூ. 30 லட்சம் மதிப்பில் வேளச்சேரி சாலை கன்னிகாபுரத்தில் பல்நோக்கு கட்டிடத்தினை மாவட்டக் கழகச் செயலாளரும், தொகுதியின் சட்ட மன்ற உறுப்பினர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று காலை திறந்து வைத்து சிறப்பிக்கிறார்.*

*சைதை தொகுதியில் தொடரும் சாதனைகளின் தொடர்ச்சியாக 172வது வார்டு மாமன்ற உறுப்பினர் இரா.துரைராஜ் வார்டு மேம்பாட்டு நிதி ரூபாய் 30 லட்சம் மதிப்பிலான பல்நோக்கு கட்டிடம் திறப்பு விழா இன்று (19.08.2024 திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில் வேளச்சேரி பிரதான சாலை, கன்னிகாபுரத்தில் நடைபெறுகிறது.*

*மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன் தலைமையிலும், துணை மேயர் மு.மகேஷ்குமார் 13வது வார்டு குழு தலைவர் இரா.துரைராஜ் ஆகியோரு முன்னிலையில்*

*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்து சிறப்புரை யாற்றுகிறார்.*

*இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன், சைதை மேற்கு பகுதி செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் உள்ளிட்ட மாவட்டத்திற்குட்பட்ட கழக முன்னணியினர் பங்கேற்கின்றனர்.*

*சைதை கிழக்கு பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள், 172அ, மற்றும் 172வது வட்டத்தில் உள்ள கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் 172 அ மற்றும் 172- வார்டு வட்டம் சார்பில் கேட்டுக்கொண்டுள்ளனர்.*



சைதை கிழக்கு பகுதி செயலாளர் இரா.துரைராஜ் தலைமையில் துணை மேயர் மு.மகேஷ்குமார், எஸ்.குணசேகரன், சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற சைதை கிழக்கு பகுதி திமுக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2) ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் வருகிற சட்டமன்ற தேர்தலை சிறப்பாக எதிர் கொள்வது பற்றி ஆலோசனை வழங்கி பேசினார். இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன், சைதை மேற்கு பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார், வட்ட செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட, பகுதி நிர்வாகிகள், பாக முகவர்கள் கலந்து கொண்டனர்